©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 219A] சென்னை, திங்கள்கிழமை, ஜூலை 10, 2017
ஆனி 26, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2017.**

**ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிலவரை வார்டுகளை வரையறை செய்வதற்காக எல்லை வரையறை ஆணையத்தை அமைப்பதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கான ஒரு சட்ட முன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்த சட்டம் 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு எல்லை வரையறை ஆணைய சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, அரசு, அறிவிக்கை வாயிலாக, குறித்திடும் அத்தகைய தேதி அன்று நடைமுறைக்கு வரும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் சூழ்நிலை வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) ''ஆணையம்'' என்பது மூன்றாம் பிரிவின்படி அமைக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம் என்று பொருள்படும் ;

(b) ''அரசு'' என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(c) ''உள்ளாட்சி'' அமைப்பு என்பது,–

(i) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஓர் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், அல்லது மாவட்ட ஊராட்சி என்றும் ; தமிழ்நாடு சட்டம் 21/1994.

(ii) 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஒரு பேரூராட்சி அல்லது நகராட்சி என்றும் ;மற்றும் தமிழ்நாடு சட்டம் V/1920.

(iii) அப்போதைக்கு செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட ஒரு மாநகராட்சி என்றும்,

பொருள்படும் .

(d) ''உறுப்பினர்கள்'' என்பது ஆணையத்தின் ஒரு உறுப்பினர் என்று பொருள்படும் மற்றும் தலைவரை உள்ளடக்கும்.

(e) ''தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர்'' என்பது, அரசமைப்பின் 243–கே உறுப்பின்படி தமிழ்நாடு ஆளுநரால் நியமிக்கப்பட்ட மாநில தேர்தல் ஆணையர் என்று பொருள்படும்.

எல்லை வரையறை ஆணையத்தை அமைத்தல்.

**3.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு பின்பு கூடிய விரைவில் அரசு, எல்லைவரையறை ஆணையம் எனப்படும் ஆணையம் ஒன்றை அமைத்தல் வேண்டும். அது பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும், அதாவது :–

(a) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், அவர் பதவி வழி, தலைவராக இருப்பார் ;

(b) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பதவி வழி ;

(c) நகராட்சி நிர்வாக ஆணையர், பதவி வழி ;

(d) பேரூராட்சிகள் இயக்குநர், பதவி வழி ;

(e) சென்னை மாநகராட்சி ஆணையர், பதவி வழி ;

(f) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர், அவர் பதவி வழி உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

(2) ஆணையத்தின் தலைமையிடம் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

ஆணையத்தின் செயற்பணிகள்.

**4.** (1) ஆணையம் பின்வரும் செயற் பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன :–

(a) எந்த முந்தைய கடைசி மக்கள் தொகை கணக்கெடுப்பில் தொடர்புடைய எண்ணிக்கை வெளியிடப்பட்டிருக்கிறதோ அந்த கடைசி மக்கள் தொகை கணக்கெடுப்பில் அறியப்பட்டுள்ளவாறான மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பிற்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதற்காக பரிந்துரை செய்தல் ;

(b) எந்த முந்திய கடைசி மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தொடர்புடைய எண்ணிக்கை வெளியிடப்பட்டு இருக்கிறதோ அந்த கடைசி மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அறியப்பட்டுள்ளவாறான மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பின் பரப்பிடத்தையும் அந்த உள்ளாட்சி அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட தேவைப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு எத்தனை வார்டுகள் தேவைப்படுமோ அத்தனை வார்டுகளாக பிரிப்பதற்கு பரிந்துரை செய்தல்;

(c) ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பிலும் வார்டுகளின் எல்லைகளை தீர்மானிப்பதற்கும் பரிந்துரை செய்தல் ;

(d) ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள ஒவ்வொரு வார்டின் மக்கள் தொகையும், இயன்றவரை, அந்த உள்ளாட்சி அமைப்பு முழுவதிலும் ஒரே மாதிரி இருப்பதை உறுதி செய்வதற்காக பரிந்துரை செய்தல் ;

(e) ஒவ்வொரு நிலவரை வார்டுகளையும் இயன்றவரை, நில அளவியல்படி ஏற்ற பரப்பிடமாக கொண்டு இருப்பதற்கு பரிந்துரை செய்தல் ;

(f) முந்தைய கடைசி மக்கள் தொகையின்படி வெளியிடப்பட்டுள்ள தொடர்புடைய மக்கள் தொகை கணக்குகளில் கண்டறியப்பட்டவாறான மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பெண்கள் ஆகியோர்களுக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலவரை வார்டு அல்லது நிலவரை வார்டுகளை தீர்மானிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல் ;

(g) அரசுக்கு வகுத்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் காலமுறை அறிக்கைகளைத் தாக்கல் செய்தல் ; மற்றும்

(h) அரசு, அவ்வப்போது குறித்துரைக்கலாகும் பிற செயற்பணிகளை புரிதல்.

ஆணையத்தின் அதிகாரங்கள்.

**5.** (1) ஆணையம், தன்னுடைய சொந்த நடைமுறையை தீர்மானித்தல் வேண்டும் மற்றும் தன்னுடைய செயற்பணிகளை புரிகையில், பின்வரும் பொருட்பாடுகள் பொருத்து, அதாவது, உரிமை வழக்கை விசாரணை செய்கையில் 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் உடையதாகும்.

மையச் சட்டம் V/1908.

(a) சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுத்தல் மற்றும் முன்னிலை ஆகுமாறு கட்டாயப்படுத்துதல் ;

(b) ஆவணம் எதனையும் முன்னிலைப்படுத்துமாறு கோருதல் ;

(c) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொது பதிவுரு எதனையும் கோருதல்.

(2) ஆணையத்தின் பரிசீலனையில் உள்ள பொருட்பாடு எதுவும், ஆணையத்தின் கருத்தில் பயன்படத்தக்க அல்லது தொடர்புடையதாக இருத்தலாகும் அம்சங்கள் அல்லது பொருட்பாடுகளின் பேரிலான தகவல் எதனையும் அளிப்பதற்கு நபர் எவரையும் கோருவதற்கு ஆணையம் அதிகாரம் உடையதாகும்.

(3) ஆணையம் (1)ஆம் உட்பிரிவின் (a) முதல் (c) வரையிலான கூறுகள் மற்றும் (2)ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்ட அதிகாரங்களில் எவற்றையும் செலுத்துவதற்கு தன்னுடைய உறுப்பினர்களில் எவருக்கும் அதிகாரம் அளிக்கலாம் மற்றும் இதன் பொருட்டு ஆணையத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உறுப்பினரால் அந்த அதிகாரங்களில் எதனையும் செலுத்துகையில் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது செய்யப்பட்ட செயல் எதுவும், ஆணையத்தின் ஆணை அல்லது நேர்வுக்கு ஏற்ப, அல்லது அதன் செயலாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருக்குமேயானால் பெரும்பான்மையோரின் கருத்தே மேலோங்கியிருக்கும். ஆணையத்தின் நடவடிக்கைகள் மற்றும் ஆணைகள் பெரும்பான்மையோரின் கருத்தின்படி தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

ஆணையத்தின் கூட்டம்.

**6.** ஆணையம், தேவையாகும்போதெல்லாம் ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்படலாகும் நேரத்திலும், இடத்திலும் அடிக்கடி கூடுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நடைமுறை விதிகளை கடைபிடித்தல் வேண்டும்.

ஆணையத்தின் பணியாளர் தொகுதி.

**7.** ஆணையம், தன்னுடைய செயற்பணிகளை திறம்பட புரிவதற்காக தேவையாதலாகும் எண்ணிக்கையிலான பணியாளர்களை அமர்த்துதல் வேண்டும். ஆணையத்தின் பணியாளர்களின் பணிவரையுரைகள் மற்றும் பணிவரைகட்டுகள் ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

பணிப்புரைகள் பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

**8.** அரசு, இந்த சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, தேவையானது அல்லது உகந்தது என தான் கருதும் பணிப்புரைகளை ஆணையத்திற்கு பிறப்பிக்கலாம்.

ஆணையத்தின் நடவடிக்கைகள் தளர்வு நிலைகளினால் செல்லத்தக்க தாக்குதல் ஆகாது.

**9.** ஆணையம், உறுப்பினரின் தற்காலிக வாராமை அல்லது ஆணையத்தின் காலியிடம் இருந்தபோதிலும் செயல்படுவதற்கு அதிகாரம் உடையதாகும் மற்றும் ஆணையத்தில் செயல் மற்றும் நடவடிக்கை எதுவும், அத்தகைய தற்காலிக வாராமை அல்லது அத்தகைய காலியிடம் இருப்பதன் காரணத்தினால் மட்டுமே செல்லதக்கதன்று அல்லது மறுத்து வாதிடப்படுதலாகாது.

ஆணையத்தின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் அரசு பணியாளர் களாவார்.

**10.** ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், உறுப்பினர் – செயலர் மற்றும் பிற பணியாளர்கள் இந்த சட்டத்தின் வகைமுறைகளில் எதனையும் அல்லது இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதி அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனையும் ஒட்டி செயற்படும்போது அல்லது செயற்படுவதாக புலப்படும்போது இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21ஆம் பொருளின்படி அரசுப்பணியாளராக கொள்ளப்படுதல் வேண்டும். மையச் சட்டம் XLV/1860.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு.

**11.** இந்தச் சட்டத்தை அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதி அல்லது ஆணை அல்லது பணிப்புரையை ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய கருதப்பட்ட எதனையும் பொருத்து, அரசு, ஆணையம் அல்லது அதன் உறுப்பினர் எவருக்கும் அல்லது அரசின் அல்லது ஆணையத்தின் பணிப்புரையின்படி செயற்படும் பணியாளர் அல்லது நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு அல்லது பிற சட்ட வழக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

ஒழுங்குமுறை விதிகளை செய்வதற்கான அதிகாரங்கள்.

**12.** ஆணையம், அரசின் முன் ஒப்புதலளிப்புடன் இச்சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்காக ஒழுங்குமுறை விதிகளை செய்யலாம்.

இடர்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**13.** இந்த சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுகையில் இடர்பாடு எதுவும் எழுமானால், அரசு, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, இந்தச்சட்டத்தின் வகைமுறைக்கு முரணாகயிராத இடர்பாடுகளை நீக்கும் நோக்கத்திற்காக, தேவையானது அல்லது உகந்தது எனத் தோன்றும் எதனையும் ஆணையின் வாயிலாக செய்யலாம்.

வரம்புரை: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுற்ற பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தொடர்புடைய எண்ணிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கும் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் அறியப்பட்டவாறான மக்கள் தொகையை குறித்த வகையில் ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள வார்டுகளை தொகுதி வரையறை செய்வது மற்றும் 2011ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், பெண்கள் ஆகியோர்களுக்கான வார்டுகளை ஒதுக்கீடு செய்வது பொறுத்த பிரச்சனைகள் கடுமையானதும் மற்றும் மிகவும் சீர்தூக்கிபார்க்கக்கூடியதுமான தன்மையுடையவையாகும். எனவே, ஒவ்வோர் உள்ளாட்சி அமைப்பிலும் வார்டுகளின் தொகுதிவரையறைகளை உருவாக்குவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் பரிந்துரைகள் செய்வதற்கு தொகுதிவரையறை ஆணையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய விவரக் குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1 (2), 3 (h), 8 மற்றும் 13 ஆகிய கூறுகள் பணிப்புரைகள் அல்லது ஆணைகளை பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது மற்றும் சட்டமுன்வடிவின் 6, 7 மற்றும் 12 ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, ஒழுங்குறுத்தும் விதிகளைச் செய்வதற்கு தொகுதி வரையறை ஆணையத்தை இயல்விக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர்.*

## நிதி விவரக் குறிப்பு.

இந்தச் சட்டமுன்வடிவு, உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள வார்டுகளின் தொகுதிகளை வரையறை செய்வதற்காக தொகுதி வரையறை ஆணையத்தை அமைப்பதற்கு வகைசெய்கிறது. இந்தச் சட்டமுன்வடிவு இயற்றப்பட்ட போது, மாநிலத்திரள் நிதியிலிருந்து செலவினங்களைச் செய்யக்கூடியதாக இருக்கும் எனினும், இந்நிலையில் உத்தேசிக்கப்பட்ட சட்டத்தின் விளைவாக செய்ய நேர்ந்த செலவினத்தின் துல்லியத்தின் அளவை மதிப்பிடுவது இயலாததாகும்.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.